## பத்திரிக்கை செய்தி

மதுரை மாநகரில் அமைந்துள்ள உலகப்புகழ் பெற்ற அருள்மிகு ஸ்ரீமீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவிலின் ஆலய திருக்குடமுழுக்கு (கும்பாபிஷேகம்) வைபவம் வருகின்ற 17.09.2026-ம் தேதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளதையொட்டி மதுரை மாநகர், மாநகரைச் சுற்றியுள்ள பகுதிகள், வெளி மாவட்டங்கள் மற்றும் வெளி மாநிலங்களிலிருந்து இலட்சக்கணக்கான பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் பேருந்துகள், இரயில், இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்களில் கும்பாபிஷேக விழாவினை காண வந்து செல்லக்கூடும் என்பதால், பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் திருக்கோவிலுக்கு வந்து செல்வதற்கும் போக்குவரத்து இடையூறு இல்லாமல் சீரான போக்குவரத்தினை ஏற்படுத்தும் பொருட்டும், மதுரை மாநகர காவல்துறையின் சார்பில் விரிவான போக்குவரத்து எற்பாடுகள் மற்றும் கீழ்கண்ட தற்காலிக போக்குவரத்து மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

**1) வாகன போக்குவரத்து மற்றும் வாகன நிறுத்தங்கள் தடை செய்யப்பட்ட சாலைகள்/இடங்கள்**

16.09.2026-ம் தேதி காலை 10.00 மணி முதல் 17.09.2026-ம் தேதி இரவு வரை கோவிலை சுற்றிலும் உள்ள சித்திரை வீதிகள் மற்றும் ஆவணிமூலவீதிகளில் வாகனங்கள் செல்வதற்கோ நிறத்துவதற்கோ அனுமதி இல்லை.

**2) திருக்குடமுழுக்கு அனுமதி சீட்டு வைத்துள்ள வாகனங்கள்**

17.09.2026 அன்று அதிகாலை திருக்குடமுழுக்கு அனுமதிச்சீட்டு வைத்துள்ள வாகனங்களை நிறுத்த கீழவெளிவீதி, மேலவெளிவீதி, தெற்குவெளிவீதி மற்றும் மாரட் வீதிகளில் நிறுத்திவிட்டு அவா்கள் செல்ல வேண்டிய கோபுர வாயிலினை அடையலாம்.

**3) கோபுர மேல்தளத்திற்கு செல்லும் அனுமதி சீட்டு வைத்துள்ளவர்கள் அவா்களது வாகனங்களை நிறுத்திவிட்டு செல்லும் இடங்கள்**

1. திருக்குடமுழுக்கு விழாவினைக் காண்பதற்காக கோபுர மேல் தளத்திற்கு செல்லும் அனுமதி அடையாளச்சீட்டு வைத்துள்ளவர்கள் மதுரை அண்ணா சிலை சந்திப்பு வழியாக கீழவெளிவீதி, நெல்பேட்டை, அம்சவள்ளி சந்திப்பு வழியாக கீழமாரட்வீதி மற்றும் கீழவெளி வீதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வாகன நிறுத்தும் இடத்தில் தங்களது வாகனங்களை நிறுத்தம் செய்துவிட்டு கோவிலுக்கு செல்லவேண்டும்.

2. அண்ணாசிலை சந்திப்பிற்கு வாகனங்கள் செல்ல முடியாமல் போக்குவரத்து நெருக்கடி ஏற்படும் சூழ்நிலையில் திருக்குடமுழுக்கு விழாவினைக் காண்பதற்காக கோபுர மேல் தளத்திற்கு செல்லும் அனுமதி அடையாளச் சீட்டு வைத்துள்ளவர்கள தல்லாகுளம் கருப்பணசாமி கோவில் சந்திப்பு, நேதாஜி பாலம் அணுகுசாலை, தமுக்கம் சந்திப்பு, கோரிப்பாளையம் சந்திப்பு, மூங்கில் கடைதெரு, தேனி ஆனந்தம் வழியாக வடகரை ரோடு. ஓப்புளா படித்துரை சந்திப்பு,. தென்கரை, ஓபுளா படித்துரை சந்திப்பு, இஸ்மாயில்புரம் வழியாக கீழவெளிவீதி அம்சவள்ளி சந்திப்பு சென்று அங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வாகன நிறுத்துமிடத்தில் தங்களது வாகனங்களை நிறுத்தம் செய்துவிட்டு கோவிலுக்கு செல்லவேண்டும்.

3. தமுக்கம் சந்திப்பிற்கு வாகனங்கள் செல்ல முடியாமல் போக்குவரத்து நெருக்கடி ஏற்படும் சூழ்நிலையில் திருக்குடமுழுக்கு விழாவினைக் காண்பதற்காக கோபுர மேல் தளத்திற்கு செல்லும் அனுமதி அடையாளச் சீட்டு வைத்துள்ளவர்கள் தல்லாகுளம் அவுட் போஸ்ட் வழியாக அவுட் போஸ்ட், மாவட்ட நீதிமன்றம், கே.கே.நகர் ஆர்ச் சந்திப்பு, ஆவின் சந்திப்பு, அரவிந்த் கண் மருத்துவமனை சந்திப்பு, குருவிக்காரன் சாலை Round about சந்திப்பு, குருவிக்காரன் சாலை சிக்னல் சந்திப்பு, முனிச்சாலை சந்திப்பு வழித்தடம் வழியாக வந்து காமராசர் சாலை மற்றும் கீழவெளிவீதியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வாகன நிறுத்துமிடங்களில் தங்களது வாகனங்களை நிறுத்தம் செய்துவிட்டு கோவிலுக்கு செல்லவேண்டும்.

4. திருப்பரங்குன்றம் திண்டுக்கல் மற்றும் தேனி ஆகிய வழித்தடங்களில் வருகின்ற வாகனங்கள் தெற்குவெளிவீதி, கட்டபொம்மன் சிலை சந்திப்பு சுற்றிலும், தெற்குமாரட்வீதி மற்றும் TPK.ரோடு ஆகிய இடங்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வாகன நிறுத்துமிடங்களை பயன்படுத்திகொண்டு தங்களது வாகனங்களை நிறுத்தம் செய்துவிட்டு கோவிலுக்கு செல்லவேண்டும்.

**4) காவல்துறையால் வழங்கப்பட்ட வாகன அனுமதி சீட்டு உள்ள வாகனங்கள்**

காவல்துறையால் வழங்கப்பட்ட இளம் ஊதா நிற வாகன அனுமதி சீட்டு வைத்துள்ள வாகனங்கள் அண்ணாசிலை சந்திப்பு, நெல்பேட்டை மற்றும் அம்சவள்ளி சந்திப்பு கடந்து மாசிவீதிகளில் வாகனங்களை நிறுத்திக்கொள்ளலாம்.

மேலும் காவல்துறையால் வழங்கப்பட்டுள்ள பச்சை நிற மிக முக்கியஸ்தர்கள் (VVIP) வாகன அனுமதி சீட்டு வைத்துள்ள வாகனங்கள் அண்ணாசிலை சந்திப்பு, கீழமாசி வீதி, வடக்கு மாரட் வீதி, தளவாய் தெரு, இந்தியன் வங்கி சந்திப்பு வழியாக வடக்காவணிமூலவீதி சென்று அங்குள்ள மீனாட்சி சீருந்து நிறுத்தத்தில் நிறுத்திக்கொள்ளலாம்.

**5) அனுமதி சீட்டு இல்லாத பொதுமக்களின் வாகனங்கள்**

அனுமதி சீட்டு இல்லாத பொதுமக்கள் அவர்களது வாகனங்களை வைகை தென்கரைச் சாலையில் ஒருபுறமாக குருவிக்காரன் சாலை ரவுண்டானா முதல் LIC. பாலம் வரை நிறுத்திக் கொள்ளலாம். மேலும் தேனி, திண்டுக்கல் மற்றும் திருப்பரங்குன்றம் வழியாக வரும் பொதுமக்கள் வாகனங்களை பெரியார் பேருந்து நிலையம், மற்றும் எல்லீஸ் நகர் ஆகிய இடங்களில் நிறுத்திக்கொள்ளலாம்.

**6) சரக்கு வாகனங்கள் செல்லும் மாற்று வழித்தடங்கள்**

16.09.2026-ம் தேதி காலை 10.00 மணி முதல் 17.09.2026-ம் தேதி இரவு 10.00 மணி வரை மதுரை நகருக்குள் எந்தவிதமான சரக்கு வாகனங்களும் வந்து செல்வதற்கு அனுமதி இல்லை.

இவ்வாகனங்கள் அனைத்தும் அருப்புக்கோட்டை சுற்றுச்சாலை, தனிச்சியம் அலங்காநல்லூர் சாலை மற்றும் கப்பலூர் சுற்றச்சாலை வழியாக மட்டுமே செல்லவேண்டும்.

தனக்கன்குளம் சந்திப்பு, நாகமலை புதுக்கோட்டை சுற்றுச்சாலை சந்திப்பு, துவரிமான் சுற்றுச்சாலை சந்திப்பு, சமயநல்லூர் சுற்றுச்சாலை சந்திப்பு, அலங்காநல்லூர் செக்போஸ்ட், நத்தம் ரோடு செக்போஸ்ட், அழகர்கோவில் ரோடு செக்போஸ்ட் மற்றும் ஒத்தக்கடை நான்கு வழிச்சாலை சந்திப்பு ஆகிய இடங்களிலிருந்து மதுரை மாநகருக்குள் கனரக சரக்கு வாகனங்கள் வருவதற்கு தடை செய்யப்பட்டுள்ளது.

**7) பொது போக்குவரத்து**

**பேருந்துகள் செல்லும் மாற்று வழித்தடங்கள்**

1) மாட்டுத்தாவணியிலிருந்து ஆரப்பாளையம் வழியாக திண்டுக்கல் மார்கமாக செல்லக்கூடிய அரசு மற்றும் தனியார் பேருந்துகள் மதுரை நகருக்குள் செல்வதை தவிர்த்து பழமார்கெட் சந்திப்பு, மேலமடை சந்திப்பு, ஆவின் சந்திப்பு வழியாக வைகை வடகரை சாலை, கபடி ரவுண்டானா, தத்தனேரி பாலம் மற்றும் அம்மா பாலம் வழியாக செல்லவேண்டும்.

2) ஆரப்பாளையம் பேருந்து நிலையத்திலிருந்து மாட்டுத்தாவணி பேருந்து நிலையம் செல்லக்கூடிய அரசு மற்றும் தனியார் பேருந்துகள் மதுரை நகருக்குள் செல்வதைத் தவிர்த்து அம்மா பாலம், தத்தனேரி ரோடு, கபடி ரண்டானா வழியாக M.M.லாட்ஜ் சென்று வழக்கமான வழித்தடங்களில் செல்லலாம்.

3) பாத்திமா கல்லூரி சந்திப்பிலிருந்து மாட்டுத்தாவணி பேருந்து நிலையம் செல்லும் அனைத்து பேருந்துகளும் கூடல்நகர் பாலம், ஆணையூர் ரோடு, அய்யர் பங்களா சந்திப்பு, மூன்றுமாவடி சர்வேயர் காலனி சந்திப்பு மற்றும் 120 அடி சாலை வழியாக செல்லவேண்டும்.

4) திருப்பரங்குன்றம் சாலை மார்க்கத்திலிருந்து பெரியார் பேருந்து நிலையம் வரும் வாகனங்கள் அனைத்தும் பழங்காநத்தம் C2 ரவுண்டானா சந்திப்பிலிருந்து கென்னட் ரோடு சந்திப்பு சென்று 70 அடி ரோடு வழியாக எல்லீஸ் நகரில் ஏற்படுத்தப்பட்டுள்ள தற்காலிக பேருந்து நிலையம் வரை சென்று திரும்ப TB.ரோடு, காளவாசல் சந்திப்பு வழியாக திருப்பரங்குன்றம் சாலைக்கு செல்லலாம்.

5) அருப்புக்கோட்டை ரோடு அவனியாபுரம் மற்றும் சிந்தாமணி ரோடு வழியாக தெற்குவாசல் சந்திப்பு மற்றும் பெரியார் நிலையம் வரக்கூடிய வாகனங்கள் வழக்கமான வழித்தடங்களில் வந்து செல்லலாம். கூட்ட நெரிசலை பொருத்து தேவைப்படும் பட்சத்தில் இவ்வாகனங்கள் அனைத்தும் ஜெயவிலாஸ் சந்திப்பில் திருப்பப்பட்டு ஜெய்ஹிந்த்புரம் மெயின் ரோடு, TVS பாலம் வழியாக C2 ரவுண்டானா சென்று எல்லீஸ் நகர் தற்காலிக பேருந்து நிறுத்தம் வரை அனுமதிக்கப்படும்.

6) PC.பெருங்காயம் சந்திப்பு மற்றும் விரகனூர் சந்திப்பிலிருந்து மதுரை நகரின் வழியாக பெரியார் பேருந்து நிலையம் மற்றும் ஆரப்பாளையம் பேருந்து நிலையம் செல்லக்கூடிய வாகனங்கள் அனைத்தும் மதுரை நகருக்குள் செல்வதை தவிர்த்து வைகை வடகரை மற்றும் தென்கரை குருவிக்காரன் சாலை வழியாக பெரியார் மற்றும் ஆரப்பாளையம் பேருந்து நிலையம் செல்லலாம்.

7) மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்திலிருந்து திருமங்கலம் செல்லக்கூடிய அனைத்து வாகனங்களும் மதுரை நகருக்குள் செல்வதை தவிர்த்து அருப்புக்கோட்டை சுற்றுச்சாலை வழியாக திருமங்கலம் செல்லலாம்.

**8) இலகுரக வாகனங்கள் செல்லும் மாற்று வழித்தடங்கள்**

**2.** மாட்டுத்தாவணியிலிருந்து ஆரப்பாளையம் செல்லக்கூடிய பொதுமக்களின் இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனங்கள்

கே.கே.நகர் ஆர்ச், பெரியார் சிலை, தமுக்கம் ஆழ்வார்புரம் இரக்கம், வைகை வடகரை சாலை, கபடி ரவுண்டானா, தத்தனேரி பாலம் மற்றும் அம்மா பாலம் வழியாக செல்லவேண்டும்.

3. ஆரப்பாளையம் பேருந்து நிலையத்திலிருந்து மாட்டுத்தாவணி பேருந்து நிலையம் செல்லக்கூடிய பொதுமக்களின் இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனங்கள மதுரை நகருக்குள் செல்வதைத் தவிர்த்து அம்மா பாலம், தத்தனேரி ரோடு, கபடி ரண்டானா வழியாக MM.லாட்ஜ் சென்று வழக்கமான வழித்தடங்களில் செல்லலாம்.

4. காளவாசல் சந்திப்பிலிருந்து அரசரடி சந்திப்பு, புது ஜெயில் ரோடு வழியாக கோரிப்பாளையம், அழகர் கோவில் சாலை மற்றும் மேலூர் சாலைக்கு செல்லக்கூடிய பொதுமக்களின் இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் அனைத்தும் மேயர் முத்து சிலை சந்திப்பில் இடதுபுறம் திரும்பி மன்னர் சிலை, கருடர் பாலம் வழியாக LIC பாலம் சென்று கபடி ரவுண்டானா வழியாக செல்லவேண்டும்.

5. அருப்புக்கோட்டை ரோடு அவனியாபுரம் மற்றும் சிந்தாமணி ரோடு வழியாக தெற்குவாசல் சந்திப்பு மற்றும் பெரியார் நிலையம் வரக்கூடிய பொதுமக்களின் இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் அனைத்தும் ஜெயவிலாஸ் சந்திப்பில் திருப்பப்பட்டு ஜெய்ஹிந்த்புரம் மெயின் ரோடு, TVS பாலம் வழியாக C2 ரவுண்டானா சென்று எல்லீஸ் நகர் தற்காலிக பேருந்து நிறுத்தம் வழியாக செல்லலாம்.

6. PC.பெருங்காயம் சந்திப்பு மற்றும் விரகனூர் சந்திப்பிலிருந்து மதுரை நகரின் வழியாக பெரியார் பேருந்து நிலையம் மற்றும் ஆரப்பாளையம் பேருந்து நிலையம் செல்லக்கூடிய பொதுமக்களின் இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் அனைத்தும் மதுரை நகருக்குள் செல்வதை தவிர்த்து வைகை வடகரை மற்றும் தென்கரை குருவிக்காரன் சாலை வழியாக பெரியார் மற்றும் ஆரப்பாளையம் பேருந்து நிலையம் செல்லலாம்.

7. மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்திலிருந்து மதுரை நகரின் வழியாக திருமங்கலம் செல்லக்கூடிய பொதுமக்களின் இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் அனைத்தும் அருப்புக்கோட்டை சுற்றுச்சாலை வழியாக திருமங்கலம் செல்லலாம்

**9) அவசரகால வாகனங்கள் செல்லும் வழித்தடங்கள்:**

➢ 108 ஆம்புலன்ஸ் மற்றும் தீயணைப்பு வாகனங்கள் அவசர கால தேவைக்காக சென்று வரும் வகையில் கீழ்கண்ட தெருக்கள் அவசர கால வழியாக பயன்படுத்த திட்டமிடப்பட்டு அவைகள் (Sterile Zone) பாதுகாக்கப்பட்ட பகுதிகளாக கண்காணிக்கப்படும். இவ்வீதிகளில் பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் யாரும் வாகனங்களில் செல்வதற்கோ நடந்து செல்வதற்கோ அனுமதி இல்லை.

1) தளவாய் தெரு
2) சென்ட்ரல் மார்க்கெட் தெரு
3) தெற்கு காவல் கூட தெரு
4) அன்னகுழி மண்டபம் தெரு

10) மேற்படி கும்பாபிஷேக விழாவிற்கு வருகை தரும் பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் அவர்களது வாகனங்களை நிறுத்துவதற்கு தேர்வு செய்யப்பட்டுள்ள இடங்கள் அனைத்திற்கும் QR-code தயார் செய்யப்பட்டு அதன் Link Share செய்யப்பட்டுள்ளது. அதனை பயன்படுத்தி பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் வாகன நிறுத்தங்களை தேர்வு செய்து பயன்படுத்திக் கொள்ளலாம்.

i) இதில் சிவகங்கை, திருச்சி மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் இருந்து கும்பாபிஷேக விழாவை காண வரும் பக்தர்களின் வாகனங்கள் விரகனூர் சுற்றுச்சாலை வழியாக வைகை தென்கரை சாலையில் தற்காலிகமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வாகன நிறுத்தங்களில் நிறுத்தம் செய்யவேண்டும்.

ii) விருதுநகர் மற்றும் திருமங்கலம் சாலை மார்க்கத்திலிருந்து திருப்பரங்குன்றம் சாலை வழியாக வரக்கூடிய பொதுமக்கள் மற்றும் பக்தர்களின் வாகனங்கள் தமிழ்நாடு பாலிடெக்னிக், மதுரை கல்லூரி, திடீர்நகர் காவல்

நிலையம் எதிரே உள்ள மரக்கடை பின்புறம் உள்ள காலியிடம் மற்றும் பெரியார் பேருந்து நிலையம் அருகிலுள்ள பலஅடுக்கு வாகன காப்பகம் ஆகிய இடங்களில் தற்காலிகமாக எற்பாடு செய்யப்பட்டுள்ள வாகன நிறுத்தங்களில் தங்களது வாகனங்களை நிறத்திக் கொள்ளலாம்.

iii) தேனி, திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களிலிருந்து வரக்கூடிய பொதுமக்கள் மற்றும் பக்தர்களின் வாகனங்கள் காளவாசல் பைபாஸ் ரோடு, பழைய RTO அலுவலகம் அருகில், அரவிந்த் மீரா பள்ளி சாலை, எல்லீஸ் நகர் சாலை, எல்லீஸ் நகர் மீனாட்சி கார் பார்க்கிங் அருகில் உள்ள வாகன நிறுத்துமிடம் ஆகிய இடங்களில் தற்காலிகமாக எற்பாடு செய்யப்பட்டுள்ள வாகன நிறுத்தங்களில் தங்களது வாகனங்களை நிறத்திக் கொள்ளலாம்.

iv) மதுரையின் வடபகுதிகளான நத்தம் சாலை, அலங்காநல்லூர் சாலை, அழகர்கோவில் சாலை மற்றும் மேலூர் சாலையிலிருந்து வரும் பொதுமக்கள் மற்றும் பக்தர்களின் வாகனங்கள் தமுக்கம் மைதானம், காந்திமியூசியம், மீனாட்சி கல்லூரி வளாகம் மற்றும் அமெரிக்கன் கல்லூரி மைதானம் ஆகிய இடங்களில் தற்காலிகமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வாகன நிறுத்தங்களிலும் வாகனங்ளை நிறுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

11) <u>தற்காலிக பேருந்து நிலையங்கள்</u>

மேற்படி கும்பாபிஷேக விழாவினை காண பேருந்துகளில் வந்து செல்லும் பொதுமக்கள் மற்றும் பக்தர்களின் வசதிக்காக மதுரை மாநகரில் i) C2.ரவுண்டானா ii) எல்லீஸ் நகர் iii) TB.ரோடு வெஸ்டன் பார்க் ஹோட்டல் அருகில் உள்ள இரயில்வே மேற்கு வாயில் iv) அண்ணா பேருந்து நிலையம் மற்றும் v) தெப்பக்குளம் ஆகிய 4-இடங்களில் தற்காலிக பேருந்து நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. பெரியார் பேருந்து நிலையத்தில் வாகன பெருக்கத்தின் காரணமாக பேருந்துகளை இயக்க முடியாத சூழ்நிலை ஏற்படும் பட்சத்தில் மேற்படி தற்காலிக பேருந்து நிலையங்கள் செயல்படுத்தப்படும்.

இரயில் மார்க்கமாக மேற்படி கும்பாபிஷேக விழாவினை காண வரும் பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் மதுரை இரயில் நிலையத்திலிருந்து நேராக டவுன்ஹால் ரோடு வழியாக நடந்து சென்று மே-பிளவர் சந்திப்பு வழியாக மேல ஆவணி மூலவீதி சென்று விழாவை காணலாம்.

## திருக்குடமுழுக்கு நாளின் போது பொதுமக்கள் மற்றும் அடையாள அட்டை உள்ளவர்கள் செல்லும் வழி குறித்த விபரங்கள்.

அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவில் திருக்குடமுழுக்கு விழா நடைபெறும் 17.09.2026 அன்று காலை 10.00 மணி வரை பொதுமக்களின் பாதுகாப்பு கருதி திருக்கோவிலைச் சுற்றியுள்ள நான்கு சித்திரை வீதிகளிலும் *அனுமதி அட்டை வைத்துள்ளவர்கள் தவிர, பிற* பொதுமக்களுக்கு அனுமதி இல்லை. மேலும் திருக்*குடமுழுக்கு நிகழ்ச்சி நடைபெறும்* போது நான்கு ஆவணி மூல வீதி*கள் வரை* பொதுமக்கள் வந்து செல்லலாம்.

2) அருள்மிகு மீனாட்சி சுந்தரரேஸ்வரர் திருக்கோவில் திருக்குடமுழுக்கு விழாவின் போது குடமுழுக்கினை காண அனுமதி அட்டை வைத்திருப்பவர்கள் 17.09.2026 அன்று அதிகாலை 05.00 மணிக்குள் கீழ்கண்ட வழித்தடங்களில் கோபுர வாயிலை அடையக் கோட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**பச்சை நிற அனுமதி அட்டை (Green Color Pass)**

பச்சை நிற அனுமதி அட்டை வைத்திருப்பவர்கள் கிழக்கு மாரட் வீதியிலிருந்து கீழமாசி வீதி, கிழக்கு ஆவணி மூல வீதி வழியாக நவீன் பேக்கரி சந்திப்பில் இருந்து மீனாட்சி கார் பார்க்கிங் நுழைவாயில், தீயணைப்பு நிலையம், கிழக்கு சித்திரை வீதியில் அமைக்கப்பட்டுள்ள Gang way, அம்மன் கிழக்கு கோபுரம், கண்காணிப்பாளார் அலுவலகம் வழியாக சென்று ஒதுக்கப்பட்ட இடத்தினை அடையலாம். திருக்குடமுழுக்கு நிறைவடைந்தபின்பு மீண்டும் உள்ளேச் சென்ற அதே வழியாகவே வெளியேறலாம்

**மஞ்சள் நிற *அனுமதி அட்டை* (Yellow Color Pass)**

மஞ்சள் நிற அனுமதி அட்டை வைத்திருப்பவர்கள் வடக்கு வெளி வீதியில் இருந்து வடக்கு மாரட், வடக்கு மாசி வீதி, வடக்கு

ஆவணி மூல வீதி வந்து தியாகி தாயம்மாள் தெரு வழியாக, வடக்கு சித்திரை வீதியில் அமைக்கப்பட்டுள்ள Gang way, வடக்கு கோபுரம் வழியாக நந்தவனம் அருகில் அமைக்கப்பட்டுள்ள படிக்கட்டு வழியாக மேலே சென்று ஒதுக்கப்பட்ட இடத்தினை அடையலாம். மீண்டும் அதே வழியாக நிகழ்ச்சி முடிவடைந்த பின்பு வெளியேறலாம்.

**<u>சிவப்பு நிற *அனுமதி அட்டை* (Red Color Pass )</u>**

சிவப்பு நிற அனுமதி அட்டை வைத்திருப்பவர்கள் மேலமாசி வீதியில் இருந்து மேல ஆவணி மூல வீதி, பெரிய வளையல்காரத் தெரு வழியாக மேற்கு சித்திரை வீதி சென்று அங்கு அமைக்கப்பட்டுள்ள Gang way, மேற்கு கோபுரம் வழியாக மேற்கு 5 நிலை கோபுரம் அருகில் உள்ள படிக்கட்டுகள் வழியாக *ஒதுக்கப்பட்டுள்ள இடத்தினை* அடையலாம். மீண்டும் அதே வழியாக நிகழ்ச்சி முடிவடைந்த பின்பு வெளியேறலாம்.

**<u>பழுப்பு நிற *அனுமதி அட்டை* (Brown Color Pass)</u>**

பழுப்பு நிற அனுமதி அட்டை வைத்திருப்பவர்கள் வடக்கு மாசி வீதி, வடக்கு ஆவணி மூல வீதி வந்து மேல பட்டமார் தெரு வழியாக, வடக்கு சித்திரை வீதியில் அமைக்கப்பட்டுள்ள Gang way, வடக்கு கோபுரம் நுழைந்து *இடது புறம் திரும்பி* நந்தவனம் படிக்கட்டுகள் வழியாக மேலே சென்று *ஒதுக்கப்பட்டுள்ள இடத்தினை* அடையலாம். மீண்டும் அதே வழியாக நிகழ்ச்சி முடிவடைந்த பின்பு வெளியேறலாம்.

.

**<u>நீலம் நிற *அனுமதி அட்டை* (Blue Color Pass)</u>**

நீலம் நிற அனுமதி அட்டை வைத்திருப்பவர் தெற்கு மாரட் வீதியில் இருந்து தெற்கு மாசி வீதி வழியாக தெற்கு ஆவணி மூல வீதி, தெற்கு காவல் கூடத்தெரு வழியாக தெற்கு சித்திரை வீதி வந்து அங்கு அமைக்கப்பட்டுள்ள Gang way, தெற்கு கோபுரம் நுழைந்து தெற்கு ஆடி வீதியில் அமைக்கப்பட்டுள்ள படிக்கட்டு வழியாக ஒதுக்கப்பட்ட *இடத்தினை* அடையலாம். மீண்டும் அதே வழியாக நிகழ்ச்சி முடிவடைந்த பின்பு வெளியேறலாம்.

**<u>ரோஸ் நிற *அனுமதி அட்டை* (Rose Color Pass)</u>**

ரோஸ் நிற அனுமதி அட்டை வைத்திருப்பவர்கள் தெற்கு மாரட் வீதியில் இருந்து தெற்கு மாசி வீதி வழியாக தெற்கு ஆவணி மூல வீதி, ஆதினம் மடம், மீனாட்சி அம்மன் கோவில் தெரு, காவல் சோதனைச்சாவடி வழியாக தெற்கு சித்திரை வீதி வந்து அங்கு அமைக்கப்பட்டுள்ள Gang way, கிழக்கு சித்திரை வீதி, அம்மன் கோபுரம் வழியாக இடது புறமாக திரும்பி வன்னி விநாயகர் கோவில் எதிரே உள்ள படிக்கட்டில் ஏறி ஒதுக்கப்பட்ட *இடத்தினை* அடையலாம். மீண்டும் அதே வழியாக நிகழ்ச்சி முடிவடைந்த பின்பு வெளியேறலாம்.

**ஊதா நிற *அனுமதி அட்டை* <u>(Purple Color Pass)</u>**

ஊதா நிற அனுமதி அட்டை வைத்திருப்பவர்கள் கிழக்கு மாரட் வீதியிலிருந்து கீழமாசி வீதி வழியாக கிழக்கு ஆவணி மூல வீதி வழியாக வந்து நவீன் பேக்கரி சந்திப்பில் இருந்து புறப்பட்டு மீனாட்சி கார் பார்க்கிங் நுழைவாயில், தீயணைப்பு நிலையம், தெற்கு சித்திரை வீதி வந்து அங்கு அமைக்கப்பட்டுள்ள Gang way, *இராசகோபுரம் வழியாக கோவிலுக்குள் சென்று அதன் அருகில் அமைக்கப்பட்டுள்ள படிக்கட்டு வழியாக மேலே சென்று ஒதுக்கப்பட்ட இடத்தினை* அடையலாம். மீண்டும் அதே வழியாக நிகழ்ச்சி முடிவடைந்த பின்பு வெளியேறலாம்.

***3)*** *திருக்குடமுழுக்கு நிகழ்ச்சி நிறைவடைந்த பின்பு அம்மன், சுவாமி சன்னதிகளில் அலங்காரம் மற்றும் மற்ற நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளதால் 17.09.2026 அன்று காலை 10.00 மணிக்கு மேல் பொதுமக்கள் தெற்கு மற்றும் மேற்கு கோபுரங்கள் வழியாக தரிசனத்திற்குச் செல்ல அனுமதிக்கப்படுவார்கள். தரிசனம் முடித்தவர்கள் கிழக்கு இராசகோபுரம் வழியாக வெளியே செல்ல அனுமதிக்கப்படுவார்கள்.*

***4)*** *திருக்குடமுழக்கு நிகழ்ச்சி முடிந்த பின்பு ஆவணி மூல வீதியிலிருந்து* பொதுமக்கள் *தரிசனத்திற்காக* கோவிலுக்கு உள்ளே செல்வதற்கு *கீழ்கண்ட வழித்தடங்கள் மூலம் சித்திரை வீதிகளுக்கு செல்ல அனுமதிக்கபடுவார்கள். ஆவணி மூல வீதியில் இருந்து தெற்கு கோபுரத்திற்கு அனுமதிக்கப்படும் வழித்தடங்கள் :*

1) சொக்கப்ப நாயக்கர் தெரு,
2) வெள்ளியம்பல தெரு,
3) மாதர்கான் டெபெத்கார் சந்து,

4) நியூ சினிமா தியேட்டர் சந்திப்பு, நேதாஜி ரோடு

***ஆவணி மூல வீதியில் இருந்து மேற்கு கோபுரத்திற்கு அனுமதிக்கப்படும் வழித்தடங்கள் :***

1) பெரிய வளையல்கார தெரு,
2) சின்ன வளையல்கார தெரு,
3) மேற்கு கோபுரத் தெரு,
4) தியாகி தாயம்மாள் தெரு,
5) வடக்கு கோபுரத் தெரு,
6) மேல பட்டமார் தெரு,
7) கீழ பட்டமார் தெரு,
8) ரெங்கசாமி சேர்வை சந்து, மேற்கண்ட வழித்தடங்களில் சித்திரை வீதிகளுக்கும் செல்ல வேண்டும்.

***தரிசனம் முடிந்த பின்பு பொதுமக்கள் கோவிலில் இருந்து வெளியே செல்வதற்கான வழித்தடங்கள்***

1) கிழக்கு சித்திரை வீதி இராசகோபுரத்திலிருந்து நவீன் பேக்கரி (மீனாட்சி பூங்கா வழியாக),
2) கிழக்கு சித்திரை வீதியிலிருந்து கிழக்கு ஆவணி மூல வீதி (அமர்ஜோதி சந்திப்பு, அம்மன் சன்னதி தெரு),
3) கிழக்கு சித்திரை வீதி, வாட்ச் டவர் பின்புறம், விஜயலட்சுமி லாட்ஜ் அருகில்,

***5) ஆம்புலன்ஸ், தீயணைப்பு வாகனங்கள் செல்ல கீழ்கண்ட வழித்தடங்கள் அவசர வழிதடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதால், இவ்வழியில் பொதுமக்கள் செல்ல அனுமதி இல்லை.***

1) பழைய சென்டரல் மார்க்கெட் சந்து,
2) அன்னக்குழி மண்டபத் தெரு,
3) தெற்கு காவல் கூடத்தெரு
(காவல்துறை தடுப்பான்கள் மூலம் பாதுகாக்கப்படும்)

***குற்றத் தடுப்பு சிறப்பு நடவடிக்கைகள்:***

*1) மேலும் பொதுமக்களின் வசதிக்காக கோவிலைச் சுற்றி உள்ள வீதிகள், எம்.ஜி.ஆர் (மாட்டுத்தாவணி) பேருந்து நிலையம், பெரியார் பேருந்து நிலையம், ஆரப்பாளையம் பேருந்து நிலையம், இரயில்வே ஜங்சன்,*

எல்லீஸ் நகர் கார் பார்க்கிங், தெப்பகுளம் கார் பார்க்கிங் உள்ளிட்ட 51 முக்கிய இடங்களில் LED திரைகள் அமைக்கப்பட்டுப் பொதுமக்கள் திருக்குடமுழுக்கு நிகழ்ச்சியை கண்டுகளிக்க சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

2) கோவிலில் ஏற்கனவே உள்ள 192 கண்காணிப்பு கேமிராக்களுடன் தற்போது புதியதாக 241 கண்காணிப்பு கேமிராக்கள் கோவிலை சுற்றியுள்ள அனைத்து வீதிகளிலும் பொருத்தப்பட்டு காவல் கட்டுப்பாட்டு அறையில் இருந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

3) இதுதவிர குற்றவாளிகளின் புகைப்படுத்துடன் ஒப்பீடு செய்யக்கூடிய நவீன FRS Camera மதுரை மாநகரில் 70 இடங்களில் பொறுத்தப்பட்டு குற்றவாளிகளின் நடமாட்டத்தை காவல் கட்டுப்பாட்டு அறையில் இருந்து கண்டறிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

4) 16 ஆய்வாளர்கள் தலைமையில் 40 குற்றத் தடுப்புக் குழுவினர் நகரின் அனைத்து இடங்களிலும், குறிப்பாக திருக்கோயில், அதனைச் சுற்றியுள்ள பகுதிகள், பேருந்து நிலையங்கள் மற்றும் இரயில் நிலையம் ஆகிய இடங்களில் ரோந்து மேற்கொள்வர்.

5) கூட்ட நெரிசலில் குழந்தைகள் காணாமல் போவதைத் தடுக்க கைப்பட்டை அணிவிக்கப்படும். இதற்கென 10 உதவி மையங்கள் அமைக்கப்படவுள்ளன .

இப்பெருவிழாவிற்கானப் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ள காவல் ஆணையர் உள்ளிட்ட சுமார் 6,500 காவல் அலுவலர்கள் மற்றும் காவலர்கள் சுழற்சி முறையில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட உள்ளனர்.

காவல் துறையினரால் மேற்கொள்ளப்பட உள்ள நடவடிக்கைகளுக்கு பக்தர்களும், வியாபாரிகளும் மற்றும் வாகன ஓட்டிகள் அனைவரும் ஒத்துழைப்பு தந்து அருள்மிகு ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவிலின் ஆலய திருக்குடமுழுக்கு நிகழ்வில் பொதுமக்களுக்கு எவ்வித சிரமமின்றி சிறப்பாக நடைபெறுவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு மதுரை மாநகர காவல் துறை சார்பாக கேட்டுக் கொள்ளப்படுகிறது.